Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.297/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW5** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | திருநாவுக்கரசு |
| Father Name | : | முத்து |
| Village | : | நேரு நகர் 5 வது தெரு, தெளிச்சாத்தநல்லூர், பரமக்குடி |
| Taluk | : | பரமக்குடி |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.08.2025.

(எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது பரமக்குடி தெளிச்சாத்தநல்லூரி நேரு நகர் 5 வது தெருவில் வசித்து வருகிறேன். கூட்டுறவு துறையில் மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். வழக்கில் இறந்துபோன கர்ணன் எனக்கு மைத்துனர். அ.சா.1 பஞ்சவர்ணம் என்னுடைய மூத்த சகோதரி. ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 17.07.2021 தமிழ் ஆடி 1ம் தேதி இரவு 08.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது என்னுடைய சகோதரி பஞ்சவர்ணம் பொட்டகவயல் கிராமத்திலிருந்து போன் மூலம் பொட்டகவயல் மாரியம்மன் கோவிலில் படுத்திருந்த என் மைத்துனர் கர்ணனை எதிரி அர்சுனன் கல்லை தூக்கிப்போட்டு கொன்றுவிட்டதாக சொன்னார். ஊரில் உள்ளவர்கள் நாங்கள் ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வருகிறோம், நீ நேராக இராமநாதபுரம் மருத்துவமனைக்கு

வந்துவிடு என்று சொன்னார்கள். நான் மருத்துவமனைக்கு வரும்போது இரவு 10.15 இருக்கும். நான் என் மைத்துனரை பார்க்க விரும்பியபோது மருத்துவர்கள் அனுமதிக்க மறுத்துவிட்டார்கள். 10.30 மணியளவில் மருத்துவரிடம் வேண்டி கேட்டபோது அனுமதித்தார்கள். என் மைத்துனரை பார்க்க உள்ளே சென்றபோது அங்கே என் மைத்துனர் சிகிச்சையில் இருந்தார். மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை செய்து கொண்டிருந்தார்கள். நான் வெளியில் வந்த 10 நிமிடம் கழித்து என் அக்காவை மருத்துவர்கள் உள்ளே அழைத்து என் அக்காவின் கணவர் கர்ணன் இறந்ததாக சொன்னார்கள். 11.00 மணியளவில் என் அக்காவின் கணவர் கர்ணனின் பிரேதத்தை பிணவறையில் வைத்து விட்டார்கள். இரவு 01.00 மணியளவில் தேவிப்பட்டினம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். புகாரை நான்தான் என் அக்கா சொல்லசொல்ல எழுதினேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள எழுதியதும் சாட்சியமான என உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சியென உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.2**. புகார் மனுவில் என் அக்கா கையெழுத்து போட்டார். காவல் ஆய்வாளர் மறுநாள் என்னை விசாரித்தார். மறுநாள் காலை இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று பிரேத பரிசோதனை செய்த உடலை பெற்று ஊருக்கு எடுத்துச் சென்று நல்லடக்கம் செய்தோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது, என் சகோதரி பஞ்சவர்ணம் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். ஊரில் உள்ள சொந்தபந்தங்களும் கூறினார்கள். பொட்டகவயல் கிராமத்திற்கும், தேவிப்பட்டினம் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 12 – 15 கிமீ இருக்கும். பொட்டகவயல் கிராமத்திலிருந்து இராமநாதபுரம் வரவேண்டும் என்றால் வேறு ஒரு வழியும் உள்ளது. பொட்டகவயல் கிராமத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு எந்த வழியாக வந்தார்கள் என்றால் நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. புகார் எந்த தேதியில் கொடுத்தோம் என்றால் 18.07.2021 தேதிய அதிகாலை 01.00 மணிக்கு கொடுத்தோம். நான் எழுதிக்கொடுத்த புகார் மனுவில் 17.07.2021 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் இருக்கலாம். மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு முன்பாகவே சம்பவம் குறித்து தகவல் கொடுக்கப்பட்டு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால்

என் அக்கா என்னிடம் சொல்லவில்லை. போலிசார் அன்று இரவு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வந்ததாக உறவினர்கள் சொன்னார்களா என்றால் சொன்னார்கள். அ.சா.1 என் உடன் பிறந்த சகோதரி என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.297/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW4** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ஆறுமுகம் |
| Father Name | : | வையன் |
| Village | : | பொட்டகவயல் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.08.2025.

<u>(எதிரி ஆஜர். )</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் பொட்டகவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன கர்ணனை தெரியும். அவரது மனைவி பஞ்சவர்ணத்தை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். என் ஊரைச் சேர்ந்தவர். கர்ணனின் நஞ்சை வயலில் கருவேலமரம் இருந்தது. கர்ணன் அந்த கருவேல மரத்தை வெட்டுவது சம்மந்தமாக என்னிடம் பேசிக்கொண்டு வந்தார். எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு முன்பு இரவு 08.00 மணியளவில் கர்ணன் என்னிடம் பேசினான். அப்போது எதிரி அர்சுனன் கர்ணனிடம் சண்டைக்கு வந்தார். எதற்காக சண்டைக்கு வந்தார் என்றால் வேறுநபரிடம் கருவேல் மரம் விற்பனை செய்வது சம்மந்தமாக சண்டைக்கு வந்தார். கர்ணன் அவரது மரத்தை வெட்டுகிறார், விற்கிறார் நீ பேசாம போடா என்று நான் எதிரி

அர்சுனனை பார்த்து சொன்னேன். பின்பு ஆடி 1ம் தேதி கர்ணன் எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் முன்பு அடிபட்டு இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள். யார் அடித்து இறந்தார் என்று எனக்கு தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவம் குறித்து யார் போலிசுக்கு தகவல் கொடுத்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.